DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 296/2024**

**Deposition of LW2 examined as PW2** Dt. 27.10.2025

| | |
|---|---|
| Name | சந்திரமோகன் |
| Father's Name | பழனிவேல் |
| Village | மயிலாடுதுறை ஜங்சன் |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 33/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.10.2025

(Accused present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து சட்டக்கல்லூரியில் 3-ம் ஆண்டு சட்டப்படிப்பு படித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது அப்பாவின் நண்பர் ஆவார். கடந்த 24.11.2023 ம் தேதி இரவு 9.30 மணியளவில் நான் வீட்டில் இருந்து ரயிலடி டீக்கடைக்கு டீ குடிக்க சென்ற போது ரயில் நிலைய வாசலில் இரண்டு பேர் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும், கூட்டமாக இருந்த இடத்தில் சென்று விசாரித்த போது டிக்கெட்டை காண்பிக்காமல் போனது தொடர்பாக சுபாஷ் என்பவருக்கும், எதிரி தமிழ்மாறன் என்பவருக்கும் இடையே தகராறு நடந்தது என்றும், இருவரையும் நான் தான் விலக்கிவிட்டதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரி எனது அப்பாவின் நண்பர் என்பதால் எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

M. Rajan 27/10/25

நீதித்துறை நடுவர் எண்-II
மயிலாடுதுறை